**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.153/2023
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : ஆரோக்கியம் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of November 2023.

22.11.2023

(எதிரிகள் 1 முதல் 6 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் முன்னால் ராணுவ வீரர் ஆவேன். சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை, இரவு 07.00 மணியளவில் அசா.2 அருள்பால்ராஜ் மற்றும் 1ம் எதிரி சவரிமுத்து இடையே அவர்களது வீட்டின் அருகே சத்தம்கேட்டது. நான் என்னவென்று பார்த்தபோது அங்கு யாரும் இல்லை. எனக்கு மற்றபடி வழக்கை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 06.10.2022ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் அசா.2 அருள்பால்ராஜ்

நடந்து வந்து கொண்டிருந்தபோது 1 முதல் 6 எதிரிகளும் அசா.2 யை பிடித்துக் கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி சவரிமுத்து அசா.2 ன் வயிற்றில் கத்தியை வைத்து குத்தும்போது அசா.2 விலகியதால் அவரது வயிற்றில் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசா.1 சோவித்பிரியா எனது கணவரை விடுங்கள் என்று கூறிக்கொண்டு வந்தவரை 5ம் எதிரி ரோசாமேரி மற்றும் 6ம் எதிரி இருதயநேசம் ஆகிய இருவரும் கட்டை கம்புடன் ஓடி வந்து சாகு என்று கூறி மாறி மாறி கம்பால் அடித்து அசா.1ன் மண்டையை உடைத்து ரத்தக்காயம் எற்படுத்தினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) அசா.1 மற்றும் அசா.2 யை பார்த்து ஆஜர் எதிரிகள் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.